**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - **S.C No.502/2017** |
| Deposition of witness for | - P.W.1 |
| Name | - Thiru. Stalin |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **10.05.2024**

**1,6 எதிரிகள் ஆஜர் 2 முதல் 5 எதிரிகள் முன்னிலையாவதில் இருந்து விலக்களிக்கப்பட்டனர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் தகவல் தொகுப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.06.2016ம் தேதி எங்கள் சமூக பாதுகாப்புத்துறை துணை இயக்குநர் அவர்களுக்கு சீனிவாசன் மற்றும் ரவிசங்கர் ஆகியோர்கள் தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு அறிவித்த தகவலின் படி துணை இயக்குநர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலருக்கு தகவல் தெரிவித்து சீனிவாசன் மற்றும் ரவிசங்கர் ஆகியோர்களிடம் 21.06.2016ம் தேதி விசாரணை செய்ததற்கு பிரபாகர் மற்றும் பத்மாவதி ஆகியோர்கள் குலமங்கலம் முடக்காத்தான் பகுதியில் உள்ள எஸ்.எஸ்.ஹாஸ்பிடலில் பிறந்து பத்து நாட்களே ஆன ஆண் குழந்தையை சட்ட விரோதமாக விற்பதற்காக காரில் எடுத்துச் சென்றதாக அளித்த புகாரின் படி

எனது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் அவர்களின் உத்தரவின் படி நான் மற்றும் எனது அலுவலகத்தில் ஆற்றுப்படுத்தின கவுன்சிலர் அவர்களும் இணைந்து சீனிவாசன், ரவிசங்கள் ஆகியோர்களையும் அழைத்து கூடல்நகர் காவல் நிலையம் சென்று மேற்படி சட்டவிரோதமாக கடத்தப்பட்ட குழுந்தையை மீட்டுத்தரும்படி நான் எழுத்து மூலமாக புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அதசாஆ.1 ஆகும்.** பின்பு போலிசார் என்னை விசாரித்து போலிசார், ரவிசங்கர், சீனிவாசன், நான் மற்றும் ஆற்றுப்படுத்துனர் சைல்டு லைன் பணியாளர் ஆகியோர்கள் இணைந்து சீனிவாசன் என்பவர் அளித்த கவிதா என்பவரின் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு கவிதா என்பவர் திருமங்கலம் அருகில் உள்ள மறவன்குளம் பகுதியில் பாக்கியலெட்சுமி என்பவர் வீட்டில் பொய்யாக தகவல் சொல்லி அவர் வீட்டில் அந்த குழந்தையை வைத்து பராமரித்தது தெரியவந்தது. பின்பு 21.06.2016ம் தேதி 05.15 மணியளவில் பாக்கியலெட்சுமி வீட்டிற்கு போலிசார், ரவிசங்கர் சீனிவாசன், நான் மற்றும் ஆற்றுப்படுத்துனர் சைல்டு லைன் பணியாளர் ஆகியோர்கள் நேரே சென்று கடத்தப்பட்டதாக கூறப்பட்ட குழந்தையை மீட்டோம். அப்போது கவிதா என்பவர் ஒப்புதல் வாக்குமூலமாக பெறப்பட்டு அவர்கள் சொன்ன கோல்டன் அறக்கட்டளை சித்ராபாய், பத்மாவதி, பிரபாகர் ஆகியோர் ஒரு குழந்தையை தன்னிடம் கொடுத்து பராமரிக்க சொன்னதாக கூறினர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான், ஆற்றுப்படுத்துனர், காவல் ஆய்வாளர், எதிரி கவிதா ஆகியோர் 05.15 மணியளவில் கையொப்பம் இட்டோம். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அதசாஆ.2 ஆகும்.** பின்பு குழந்தையை மீட்டு குழந்தையின் உடல்நிலை கருதி மதுரை முத்துப்பட்டியில் உள்ள குழந்தைகள் நலக்குழு, சமூக

பாதுகாப்புத்துறை துணை இயக்குநர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலவலர் முன்னிலையில் குழந்தை குழந்தை நலக்குழுவில் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கவிதா என்பவரிடம் விசாரணை செய்ததில் அவரை அழைத்துக்கொண்டு கே.கே நகர்பகுதியில் உள்ள கோல்டன் அறக்கட்டளை சென்று அவர் அடையாளம் காட்டிய சித்ராபாய், பிரபாகர், பத்மாவதி ஆகியோர்களை காவல் துறையினர் கைது செய்தனர். பின்பு காவல் நிலையம் வந்து பிரபாகர் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன்படி ராஜசேகர் என்பவர் 10.06.2016ம் தேதி பிரபாகர் என்பவருக்கு தொலைப்பேசி மூலம் எஸ்எஸ் ஹாஸ்பிடலில் ஒரு ஆண் குழந்தை உள்ளது என்றும் அதனை தங்கள் மூலம் விற்பதற்கு தெரிவித்தார் அதன்படி 12.06.2016ம் தேதி கோல்டன் அறக்கட்டளை உரிமையாளர் சித்ராபாய் மற்றும் பிரபாகர் மதியம் 01.00 மணியளவில் எஸ்.எஸ.மருத்துவமனைக்கு காரில் வந்து குழந்தையை எடுத்துச்சென்றதாக தெரிவித்தார். அதனை அவர் அறக்கட்டளையில் பணிபுரியும் கவிதா என்பவர் திருமங்கலம் மறவன்குளத்தில் உள்ள பாக்கியலெட்சுமி என்பவர் வீட்டில் பொய்யாக சொல்லி அக்குழந்தையை பராமரித்ததாக தெரிவித்தார். காவல் ஆய்வாளர், எதிரி, ஆற்றுப்படுத்தனர் மற்றும் நான் கையொப்பம் செய்தோம். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அதசாஆ.3 ஆகும்.** 07.45 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.